©
GOVERNMENT OF TAMIL NADU
2022

[Regd. No. TN/CCN/467/2012-14.
[R. Dis. No. 197/2009.
[Price : Rs. 5.60 Paise.

# TAMIL NADU GOVERNMENT GAZETTE

**PUBLISHED BY AUTHORITY**

No. 33] CHENNAI, WEDNESDAY, AUGUST 17, 2022
Aavani 1, Subakiruthu, Thiruvalluvar Aandu–2053

# Part VI—Section 2

## Notifications of interest to a section of the public issued by Heads of Departments, etc.

## NOTIFICATIONS BY HEADS OF DEPARTMENTS, ETC.

### CONTENTS

| | Pages. |
|---|---|
| TAMIL NADU ELECTRICITY REGULATORY COMMISSION, CHENNAI | |
| Amendment to the Tamil Nadu Electricity Supply Code, 2004. | 230-241 |
| GOVERNMENT EXAMINATION/EDUCATIONAL OFFICERS | |
| Loss of Certificates. .. .. .. .. .. | 242 |

தமிழ்நாடு மின்சார ஒழுங்குமுறை ஆணையம்

**2004ஆம் ஆண்டு தமிழ்நாடு மின் வழங்கல் விதித்தொகுப்பிற்குரிய திருத்தம் (அறிவிக்கை எண்.தமிஒஆ/வவி/7-46, 26.07.2022 நாளிட்டது)**

2003 ஆம் ஆண்டு மின்சாரச் சட்டத்தின் (மத்தியச் சட்டம் 36/2003) 50ஆம் பிரிவுடன் சேர்த்துப்படிக்கப்படும் 181 ஆம் பிரிவினால் வழங்கப்பட்ட அதிகாரங்களையும், இதன் பொருட்டு இயல்விக்கும் அனைத்துப்பிற அதிகாரங்களையும் செலுத்தி தமிழ்நாடு மின்சார ஒழுங்குமுறை ஆணையம், இதன் மூலம் தமிழ்நாடு மின் வழங்கல் விதித்தொகுப்பில் பின்வரும் திருத்தங்களை செய்கிறது. அதன் வரைவு, மேற்சொன்ன 181ஆம் பிரிவின் (3) ஆம் உட்பிரிவின்படி வேண்டுறுத்தப்பட்டவாறு முன்னதாக வெளியிடப்பட்டது.

அது *தமிழ்நாடு அரசிதழில்* வெளியிடப்பட்ட நாளன்று நடைமுறைக்கு வரும்.

**திருத்தம்**

**2004ஆம் ஆண்டு தமிழ்நாடு மின் வழங்கல் விதித்தொகுப்பு -**

(i) மேற்சொன்ன தமிழ்நாடு மின் வழங்கல் விதித்தொகுப்பு 2004ன் 5 ஆம் ஒழுங்குமுறைவிதியின் (7) ஆம் உள்ஒழுங்குமுறைவிதியில் (i) ஆம் இனத்தில் –

(a) "பிற நிகழ்வுகளில்" என்பதற்கு பதிலாக "விற்பனை / பதிவு செய்யப்பட்ட குத்தகை அல்லது சட்டப்பூர்வ குடியிருப்பு போன்ற இதர பிற நிகழ்வுகளில்," எனும் சொற்றொடர் புகுத்தப்படுதல்வேண்டும்.

(b) 5 ஆம் ஒழுங்குமுறைவிதியின் (7) ஆம் உள்ஒழுங்குமுறைவிதியில் உள்ள "விளக்கம்" என்பதில் உள்ள தற்போதைய பத்தி (i) என வரிசைப்படுத்தப்பட்டு, அதற்கடுத்து கீழ்வரும் இரு பத்திகள் சேர்க்கப்படவேண்டும்.

"(i) மின் இணைப்பில் உள்ள நிலுவை முழுமையாக செலுத்தப்படாவிட்டால் பெயர் மாற்றம் செய்யப்படமாட்டாது."

(ii) சட்டப்பூர்வ குடியமர்விற்கான சான்றாக, பதிவு செய்யப்பட்ட அதிகார அளிப்பு ஆவணம் அல்லது பதிவு செய்யப்பட்ட குத்தகை ஒப்பாவணம் அல்லது உரிய அதிகார அமைப்பிடமிருந்து பெறப்பட்ட உடைமை கட்டளை போன்ற குடியிருப்பு சான்று அல்லது அந்தந்த வரம்பு எல்லைக்குண்டான நீதிமன்ற தீர்ப்புகள் / உத்தரவுகள் போன்றவை கருதப்படும்."

(i) தமிழ்நாடு மின் வழங்கல் விதித்தொகுப்பு 2004ன் 17 ஆம் ஒழுங்குமுறைவிதியில் உள்ஒழுங்குமுறைவிதி (5)ற்கு பதிலாக பின்வரும் ஒழுங்குமுறை விதி அமைக்கப்படுதல் வேண்டும்.

(5) மின் இணைப்பு கீழ்க்கண்ட காரணங்களுக்காக மூன்று மாத காலமாகத் துண்டிப்பில் இருந்தால் –

(i) உரிமதாரருக்கு கட்டவேண்டிய நிலுவைகளைச் செலுத்தாமைக்காக, அல்லது

(ii) மாசுக் கட்டுப்பாட்டு வாரியத்தினால் ஒழுங்குமுறை விதி 21(2)ன்படி நீதிமன்ற அல்லது ஏதேனும் நீதி அமைப்புகளால் இயல்விக்கப்பட்ட ஆணை அல்லது பிறப்பிக்கப்பட்ட ஆணையின் அடிப்படையில் பிற அரசுதுறையினால் வழங்கப்பட்ட ஆணையின்படியோ, அல்லது நீதிமன்ற ஆணைப்படியோ அல்லது ஏதேனும் நீதி அமைப்புகளின் ஆணையால் மின் இணைப்பு துண்டிக்கப்பட்டால்,

அறிவிப்பு பெற்ற மூன்று மாதங்களுக்குள், உரிமதாரருக்கு செலுத்தவேண்டிய நிலுவைகளை செலுத்தியும் மற்றும் துண்டிப்பிற்கான ஆணை பிறப்பித்த உரிய துறையிடமிருந்து மறுஇணைப்பிற்கான உரிய அனுமதியையும் சமர்ப்பித்து மின் வழங்கலை மீள இணைத்துக்கொள்ள கோரியும், அப்படி மீள இணைத்துக்கொள்ளாத நிலையில் இசைவுப் பத்திரம் அதற்குப் பிறகு தானே முடிவுக்கு வந்துவிடும் என்றும் உரிமதாரர் ஓர் அறிவிப்பை நுகர்வோருக்குத் தரவேண்டும். நீதிமன்ற வழக்குகளின் காரணமாக எந்தவொரு ஆட்சேபனைக்குட்பட்ட நிலுவையும் இல்லாதபட்சத்தில், அம்மூன்று மாதக் கால அறிவிப்பு முடிந்ததும் இசைவுப்பத்திரம் முடிவுக்கு வந்தாகிவிடும். இருப்பினும், மாதாந்திர குறும கட்டணம் அதிகபட்சமாக ஆறு மாதங்களுக்கு விதிக்கப்படும்.

(iii) தமிழ்நாடு மின் வழங்கல் விதித்தொகுப்பு 2004ன் 22 ஆம் ஒழுங்குமுறைவிதியின் (6) ஆம் உள்ஒழுங்குமுறைவிதியில் (i) ஆம் இனத்தில்

(அ) "மின் கட்டணம் செலுத்தாமைக்காக" எனும் சொற்றொடருக்கு அடுத்தபடியாக "அல்லது ஒழுங்குமுறை விதி 17(5)(ii)ல் தெரிவிக்கப்பட்டுள்ள காரணங்களுக்காக" எனும் சொற்றொடர் புகுத்தப்படுதல் வேண்டும்.

(ஆ) "உள்ளபடியே நிலுவையைச் செலுத்துவதற்கும்" எனும் சொற்றொடருக்கு அடுத்தபடியாக "சட்டப்படியான முறையான அனுமதியையும் சமர்ப்பிப்பதற்கும்" எனும் சொற்றொடர் புகுத்தப்படுதல் வேண்டும்.

(iv) தமிழ்நாடு மின் வழங்கல் விதித்தொகுப்பு 2004ன் பின்னிணைப்பின் படிவம்–1–ல்

(அ) பின்னிணைப்பின் படிவம்–1–ன் இனம்–1ல் "விற்பனை" என்னும் சொல்லிற்கு அடுத்து "/பதிவு செய்யப்பட்ட குத்தகை ஒப்பாவணம் / சட்டபூர்வ குடியமர்விற்கான சான்றாக, பதிவு செய்யப்பட்ட அதிகார அளிப்பு ஆவணம் /உரிய அதிகார அமைப்பிடமிருந்து பெறப்பட்ட உடைமை கட்டளை போன்ற குடியிருப்பு சான்று அந்தந்த வரம்பு எல்லைக்குண்டான நீதிமன்ற தீர்ப்புகள் / உத்தரவுகள்" எனும் சொற்றொடரை சேர்க்கவேண்டும்.

(ஆ) பின்னிணைப்பின் படிவம்–1–ல் "கட்ட வேண்டிய பாக்கி இருந்தால் அதையும்" என்ற சொற்றொடருக்கு அடுத்து "மற்றும் ஏதேனும் சட்டஅமைப்புகளில் நீதிமன்ற வழக்கு நிலுவைத்தொகை இருந்தால் அதையும்" எனும் சொற்றொடரை சேர்க்கவேண்டும்.

(V) தமிழ்நாடு மின் வழங்கல் விதித்தொகுப்பு 2004ன் பின்னிணைப்பின் படிவம்–2–ல்

(அ) பின்னிணைப்பின் படிவம்–2–ன் 'பெயர் மாற்றப் படிவங்கள்' எனும் தலைப்பின் கீழ் துணைத்தலைப்பில் "விற்பனை" என்னும் சொல்லிற்கு அடுத்து "/ பதிவு செய்யப்பட்ட குத்தகை / சட்டபூர்வ குடியமர்விற்கான சான்றாக, பதிவு செய்யப்பட்ட அதிகார அளிப்பு ஆவணம் / உரிய அதிகார அமைப்பிடமிருந்து பெறப்பட்ட உடைமை கட்டளை போன்ற குடியிருப்பு சான்று / நீதிமன்ற தீர்ப்புகள் / உத்தரவுகள்" எனும் சொற்றொடரை சேர்க்கவேண்டும்.

(ஆ) பின்னிணைப்பின் படிவம்–2–ன் 'பெயர் மாற்றப் படிவங்கள்' எனும் தலைப்பின் கீழ் "அவருக்கு விற்று விட்டமையால்" என்னும் சொற்றொடருக்கு அடுத்து / குத்தகைக்கு விட்டுவிட்டமையால்" எனும் சொற்றொடரை சேர்க்கவேண்டும்.

(இ) பின்னிணைப்பின் படிவம்–2–ல் "ஒப்புக்கொள்வதை வைத்து தரப்படலாம்" என முடிவுறும் பத்தி–க்கு அடுத்த பத்தியாக கீழ்வரும் இனத்தை சேர்க்கவேண்டும்.

"...........என்ற கணக்கு எண்ணில் பின்னாளில் பெயர் மாற்றம் பெறுபவர் ஏதேனும் நிலுவையை செலுத்தத்தவறினால் அந்நிலுவையினை நான் செலுத்த உறுதி ஏற்கிறேன். (இது விற்பனை அல்லாத இதரவகையின்கீழ் கோரும் பெயர் மாற்றத்திற்கு மட்டும் பொருந்தும்)

சென்னை–600 032,
26 ஜூலை 2022.

**சி. வீரமணி,**
*செயலாளர்,*
*தமிழ்நாடு மின்சார ஒழுங்குமுறை ஆணையம்.*

**விளக்கவுரை**

தமிழ்நாடு மின்சார ஒழுங்குமுறை ஆணைய வினியோக விதி 2004ற்கு இணங்க, செல்லத்தக்க சான்றுகளான பதிவு செய்யப்பட்ட அதிகார அளிப்பு ஆவணம் அல்லது மின்னிணைப்பிற்கான விண்ணப்பம் கொடுக்கும் தேதிக்கு முன் அளிக்கப்பட்ட சமீபத்திய வாடகை ரசீது அல்லது குத்தகை ஒப்பாவணம் அல்லது நீதிமன்ற தீர்ப்புகள் / உத்தரவுகள் அல்லது உரிய அதிகார அமைப்பிடமிருந்து பெறப்பட்ட உடைமை கட்டளை போன்ற குடியிருப்பு சான்று போன்றவற்றில் ஏதேனும் ஒன்றின் அடிப்படையில், உரிமையாளரின் ஒப்புதல் இருப்பினும் இல்லாவிடினும், புதிய தாழ்வழுத்த அல்லது உயரழுத்த மின்னிணைப்பு வழங்கப்படுகிறது. இருப்பினும், குத்தகை ஒப்பந்தத்தின் அடிப்படையிலான சட்டப்பூர்வமான சொத்துடைமை கொண்ட இனங்களின்பேரில், தமிழ்நாடு மின்சார ஒழுங்குமுறை ஆணையத்தின் மின் வழங்கல்விதியில் உரிய வழிகாட்டு விதிமுறைகள் இல்லாததால், மின்னிணைப்பு பெயர்மாற்றம் செய்யமுடிவதில்லை என்பதை சில மின் நுகர்வோர் மூலம் ஆணையத்தின் கவனத்திற்கு கொண்டுவரப்பட்டது. இதனை கருத்திற்கொண்டு மேற்கண்ட திருத்தத்திற்கான வகைமுறை கொண்டுவரப்பட்டது.

2. Water (Prevention and Control of Pollution) Act 1974, Air (Prevention and Control of Pollution) Act 1981 and Environment (Protection) Act 1986 ஆகிய சட்டவிதிகளுக்கு புறம்பாக செயல்பட்டமைக்காக அல்லது நீதிமன்ற ஆணைகளின்படியோ மின்இணைப்புகள் துண்டிப்பு செய்யப்படுகின்றன, அத்தகைய சட்டவிதிகளுக்கு முரணான பயன்பாட்டை பல்லாண்டுகளாக (5/10 ஆண்டுகள் வரை) நுகர்வோர் அனுபவதாரரால் சரிசெய்யப்படாத நிலை நீடிக்கிறது, மேலும், அத்தகைய நுகர்வோரின் கணக்குகள் அதற்கான சரியான ஒழுங்குமுறைவிதிகள் வேண்டி நிலுவையில் உள்ளன. இந்த திருத்தம் மேலேயுள்ள செயற்குறிப்பிற்கு செயல்வடிவம் கொடுக்க விளைகிறது.

(தமிழ்நாடு மின்சார ஒழுங்குமுறை ஆணையத்தின் ஆணைப்படி)

சென்னை–600 032,
26 ஜூலை 2022.

**சி. வீரமணி,**
*செயலாளர்,*
*தமிழ்நாடு மின்சார ஒழுங்குமுறை ஆணையம்.*

இருந்துவரும் வகைமுறை மற்றும் திருத்தத்தை உள்ளடக்கிய வகைமுறை இவற்றைகாட்டும் விவரவுரை

| இருந்துவரும் வகைமுறை | திருத்தத்தை உள்ளடக்கிய வகைமுறை |
|---|---|
| 5. பல்வகைக் கட்டணங்கள்<br><br>xxxx xxxx xxxx<br><br>7. பெயர் மாற்றக் கட்டணம்:<br><br>(i) பெயர் மாற்றத்திற்கான ஒவ்வொரு விண்ணப்பமும், பிற நிகழ்வுகளில், இந்த விதித் தொகுப்பின் பின்னிணைப்பில் உள்ள படிவம் (1) மற்றும் (2) இல் பின்வருவனவற்றுடன் இணைத்துத்தரப்பட வேண்டும்.<br><br>(a) xxxxxx<br><br>(b) xxxxxx<br><br>(c) xxxxxx<br><br>விளக்கம்:<br><br>துண்டிப்பில் இல்லாத மின்னிணைப்புகளுக்கு மட்டுமே பெயர் மாற்றம் வழங்கப்படும். | 5. பல்வகைக் கட்டணங்கள்<br><br>xxxx xxxx xxxx<br><br>7. பெயர் மாற்றக் கட்டணம்:<br><br>(i) பெயர் மாற்றத்திற்கான ஒவ்வொரு விண்ணப்பமும், விற்பனை / பதிவு செய்யப்பட்ட குத்தகை அல்லது சட்டப்பூர்வ குடியிருப்பு போன்ற, இதர பிற நிகழ்வுகளில், இந்த விதித் தொகுப்பின் பின்னிணைப்பில் உள்ள படிவம் (1) மற்றும் (2) இல் பின்வருவனவற்றுடன் இணைத்துத்தரப்பட வேண்டும்.<br><br>(a) xxxxxx<br><br>(b) xxxxxx<br><br>(c) xxxxxx<br><br>விளக்கம்:<br><br>(i) துண்டிப்பில் இல்லாத மின்னிணைப்புகளுக்கு மட்டுமே பெயர் மாற்றம் வழங்கப்படும்.<br><br>(ii) மின் இணைப்பில் உள்ள நிலுவை முழுமையாக செலுத்தப்படாவிட்டால் பெயர் மாற்றம் செய்யப்படமாட்டாது.<br><br>(iii) சட்டப்பூர்வ குடியமர்விற்கான சான்றாக, பதிவு செய்யப்பட்ட அதிகார அளிப்பு ஆவணம் அல்லது பதிவு செய்யப்பட்ட குத்தகை ஒப்பாவணம் அல்லது உரிய அதிகார அமைப்பிடமிருந்து பெறப்பட்ட உடைமை கட்டளை போன்ற குடியிருப்பு சான்று அல்லது அந்தந்த வரம்பு எல்லைக்குண்டான நீதிமன்ற தீர்ப்புகள் / உத்தரவுகள் போன்றவை கருதப்படும். |
| 17. மின் வழங்கலுக்கான இசைவுப்பத்திரம், கட்டணங்களை மீட்பது பற்றிய விபரங்கள்:<br><br>(1) xxxxxx<br><br>(2) xxxxxx<br><br>(3) xxxxxx<br><br>(4) xxxxxx<br><br>(5) உரிமதாரருக்குக் கட்ட வேண்டிய நிலுவைகளைச் செலுத்தாமைக்காக மூன்று மாதக் காலமாகத் துண்டிப்பில் இருந்தால், அறிவிப்பு பெற்ற மூன்று மாதங்களுக்குள் மின் வழங்கலை மீள இணைத்துக்கொள்ள கோரியும், அப்படி மீள இணைத்துக் கொள்ளாத நிலையில் இசைவுப் பத்திரம் அதற்குப் பிறகு தானே முடிவுக்கு வந்துவிடும் என்றும் உரிமதாரர் ஓர் அறிவிப்பை நுகர்வோருக்குத் தரவேண்டும். அம்மூன்று மாதக் கால அறிவிப்பு முடிந்ததும் இசைவுப்பத்திரம் முடிவுக்கு வந்தாகிவிடும். | 17. மின் வழங்கலுக்கான இசைவுப்பத்திரம், கட்டணங்களை மீட்பது பற்றிய விபரங்கள்:<br><br>(1) xxxxxx<br><br>(2) xxxxxx<br><br>(3) xxxxxx<br><br>(4) xxxxxx<br><br>(5) மின் இணைப்பு கீழ்க்கண்ட காரணங்களுக்காக மூன்று மாத காலமாகத் துண்டிப்பில் இருந்தால்—<br><br>(i) உரிமதாரருக்கு கட்டவேண்டிய நிலுவைகளைச் செலுத்தாமைக்காக, அல்லது<br><br>(ii) மாசுக் கட்டுப்பாட்டு வாரியத்தினால் ஒழுங்குமுறை விதி 21(2)ன்படி நீதிமன்ற அல்லது ஏதேனும் நீதி அமைப்புகளால் இயல்விக்கப்பட்ட ஆணை அல்லது பிறப்பிக்கப்பட்ட ஆணையின் அடிப்படையில் பிற அரசுதுறையினால் வழங்கப்பட்ட ஆணையின்படியோ, அல்லது நீதிமன்ற ஆணைப்படியோ அல்லது ஏதேனும் நீதி அமைப்புகளின் ஆணையால் மின் இணைப்பு துண்டிக்கப்பட்டால், |

| | |
|---|---|
| | அறிவிப்பு பெற்ற மூன்று மாதங்களுக்குள், உரிமதாரருக்கு செலுத்தவேண்டிய நிலுவைகளை செலுத்தியும் மற்றும் துண்டிப்பிற்கான ஆணை பிறப்பித்த உரிய துறையிடமிருந்து மறு இணைப்பிற்கான உரிய அனுமதியையும் சமர்ப்பித்து மின் வழங்கலை மீள இணைத்துக் கொள்ள கோரியும், அப்படி மீள இணைத்துக் கொள்ளாத நிலையில் இசைவுப் பத்திரம் அதற்குப் பிறகு தானே முடிவுக்கு வந்துவிடும் என்றும் உரிமதாரர் ஓர் அறிவிப்பை நுகர்வோருக்குத் தரவேண்டும். நீதிமன்ற வழக்குகளின் காரணமாக எந்தவொரு ஆட்சேபனைக்குட்பட்ட நிலுவையும் இல்லாத பட்சத்தில், அம்மூன்று மாதக் கால அறிவிப்பு முடிந்ததும் இசைவுப்பத்திரம் முடிவுக்கு வந்தாகிவிடும். இருப்பினும், மாதாந்திர குறும கட்டணம் அதிகபட்சமாக ஆறு மாதங்களுக்கு விதிக்கப்படும். |
| 22. மின்வழங்கலை மீட்டுத்தரல் (Restoration):<br>(1) xxxxxx<br>(2) xxxxxx<br>(3) xxxxxx<br>(4) xxxxxx<br>(5) xxxxxx<br>(6) (i) மின்னிணைப்பு, மின் கட்டணங்கள் செலுத்தாமைக்காக ஆறு மாதங்களுக்கு மேலாக துண்டிக்கப்பட்டிருக்கிறபோது, நுகர்வோர், கீழே சொல்லப்பட்ட கால அளவிற்குள் செலுத்த முன் வந்து, உள்ளபடியே நிலுவையைச் செலுத்துவதற்கும் மற்றும் கீழேயுள்ள (ii)ஆம் கூறில் உள்ளவாறு கட்டணங்களைச் செலுத்துவதற்கும் சம்மதிப்பார் எனில் அதிகாரமளிக்கப்பட்ட அலுவலர், அறிவிப்புக் காலத்திற்கு அப்பால் கால நீட்டிப்பு வழங்கலாம் மற்றும் மின்னிணைப்பிற்கான மின் தொடர்கள் அகற்றப்படாதிருந்து, துண்டிக்கப்பட்ட மின் இணைப்பிற்கு மறுபடியும் மின்னிணைப்பு கொடுக்க வசதியாக இருக்குமானால், உடன்பாட்டுப்பத்திரத்தின் முடிவுறுத்தத்தை ரத்து செய்யலாம். | 22. மின்வழங்கலை மீட்டுத்தரல் (Restoration);<br>(1) xxxxxx<br>(2) xxxxxx<br>(3) xxxxxx<br>(4) xxxxxx<br>(5) xxxxxx<br>(6) (i) மின்னிணைப்பு, மின் கட்டணங்கள் செலுத்தாமைக்காக அல்லது ஒழுங்குமுறை விதி 17(5)(ii)ல் தெரிவிக்கப்பட்டுள்ள காரணங்களுக்காக ஆறு மாதங்களுக்கு மேலாக துண்டிக்கப்பட்டிருக்கிறபோது, நுகர்வோர், கீழே சொல்லப்பட்ட கால அளவிற்குள் செலுத்த முன் வந்து, உள்ளபடியே நிலுவையைச் செலுத்துவதற்கும் சட்டப்படியான முறையான அனுமதியையும் சமர்ப்பிப்பதற்கும் மற்றும் கீழேயுள்ள (ii)ஆம் கூறில் உள்ளவாறு கட்டணங்களைச் செலுத்துவதற்கும் சம்மதிப்பார் எனில் அதிகாரமளிக்கப்பட்ட அலுவலர், அறிவிப்புக் காலத்திற்கு அப்பால் கால நீட்டிப்பு வழங்கலாம் மற்றும் மின்னிணைப்பிற்கான மின்தொடர்கள் அகற்றப்படாதிருந்து, துண்டிக்கப்பட்ட மின் இணைப்பிற்கு மறுபடியும் மின்னிணைப்பு கொடுக்க வசதியாக இருக்குமானால், உடன்பாட்டுப்பத்திரத்தின் முடிவுறுத்தத்தை ரத்து செய்யலாம். |

| | |
|---|---|
| பின்னிணைப்பு | பின்னிணைப்பு |
| படிவம் 1 | படிவம் 1 |
| (பார்க்க, ஒழுங்குமுறை விதிகள் 5(7)) | (பார்க்க, ஒழுங்குமுறை விதிகள் 5(7)) |
| பெறுநர் | பெறுநர் |
| குறிப்பிட்ட பதவிப் பொறியாளர் ........................................ | குறிப்பிட்ட பதவிப் பொறியாளர் ........................................ |
| (முழு முகவரியும் தொலைபேசி எண்ணும்) என்ற முகவரியில் திரு/ திருமதி ..................... அவர்களின் மகனாகிய / மகளாகிய / மனைவியாகிய திரு/திருமதி ........... எனப்பெயருள்ள நான் வாழ்ந்து வருகிறேன். | (முழு முகவரியும் தொலைபேசி எண்ணும்) என்ற முகவரியில் திரு / திருமதி............ அவர்களின் மகனாகிய / மகளாகிய / மனைவியாகிய திரு/திருமதி ..............எனப்பெயருள்ள நான் வாழ்ந்து வருகிறேன். |
| .........வட்டத்தில்.........என்ற ஊரில் /நகரில் | ..........வட்டத்தில்எ...........ன்ற ஊரில் /நகரில் |
| ......என்ற தெருவில் ......... என்ற கதவிலக்கமும் ................................ கட்டண வீதத்தில்........... என்ற பகிர்மானத்தின் ......... என்ற மின்னிணைப்பு எண்ணில் மின்சாரம் தரப்பட்டுள்ளதுமான, முன்பு திரு / திருமதி ......... அவர்களின் மகனாகிய / மகளாகிய /மனைவியாகிய திரு / திருமதி......... என்பவரில் இருந்த இருப்பிடம், இப்போது எனது உடைமையாகி உள்ளது. | ...........என்ற தெருவில் ......... என்ற கதவிலக்கமும் கட்டண வீதத்தில்............ என்ற பகிர்மானத்தின் ......... என்ற மின்னிணைப்பு எண்ணில் மின்சாரம் தரப்பட்டுள்ளதுமான, முன்பு திரு / திருமதி ......... அவர்களின் மகனாகிய / மகளாகிய /மனைவியாகிய திரு / திருமதி......... என்பவரில் இருந்த இருப்பிடம், இப்போது எனது உடைமையாகி உள்ளது. |
| 1) மேற்குறிப்பிட்ட கட்டிடம் எனது உடைமையானதற்கான விற்பனைப் பத்திரத்தின் உலர்மின் நகல் (Xerox copy). | 1) மேற்குறிப்பிட்ட கட்டிடம் எனது உடைமையானதற்கான விற்பனைப் பத்திரம்/ பதிவு செய்யப்பட்ட குத்தகைப் பத்திரம் / உரிய அதிகார அமைப்பிடமிருந்து பெறப்பட்ட உடைமை கட்டளை போன்ற குடியிருப்பு சான்று / அந்தந்த வரம்பு எல்லைக்குண்டான நீதிமன்ற தீர்ப்புகள் அல்லது உத்தரவுகளின் உலர்மின் நகல் (Xerox copy). |
| அல்லது | அல்லது |
| பெருநகர நீர், வடிகால் இணைப்பு எனது பெயரில் உள்ளது. அதற்கான அரசிதழ் பதிவு பெற்ற அலுவலரால் சான்றொப்பமிடப்பட்ட ஆதாரத்தின் உலர்மின் நகல். | பெருநகர நீர், வடிகால் இணைப்பு எனது பெயரில் உள்ளது. அதற்கான அரசிதழ் பதிவு பெற்ற அலுவலரால் சான்றொப்பமிடப்பட்ட ஆதாரத்தின் உலர்மின் நகல். |
| அல்லது | அல்லது |
| உரிய வட்டாட்சியரால் வழங்கப்பட்ட வாரிசுச் சான்றிதழ் | உரிய வட்டாட்சியரால் வழங்கப்பட்ட வாரிசுச் சான்றிதழ் |
| 2) விண்ணப்பப்படிவம் மற்றும் இசைவுப் பத்திரப் படிவம். | 2) விண்ணப்பப்படிவம் மற்றும் இசைவுப் பத்திரப் படிவம். |
| 3) ரூ.80/– மதிப்புள்ள நீதித்துறை சாரா முத்திரைத் தாளில் உள்ள காப்புறுதிப் பத்திரம். | 3) ரூ.80/– மதிப்புள்ள நீதித்துறை சாரா முத்திரைத் தாளில் உள்ள காப்புறுதிப் பத்திரம். |
| ஆகியவை இத்துடன் இணைக்கப்பட்டுள்ளன. ............என்ற கணக்கு எண்ணில் பின்னாளில் ஏதாவது கட்ட வேண்டிய பாக்கி இருந்தால் அதையும் கட்டவும் நான் இதன் மூலம் உறுதி ஏற்கிறேன். | ஆகியவை இத்துடன் இணைக்கப்பட்டுள்ளன.............என்ற கணக்கு எண்ணில் பின்னாளில் ஏதாவது கட்ட வேண்டிய பாக்கி இருந்தால் அதையும் மற்றும் ஏதேனும் சட்டஅமைப்புகளில் நீதிமன்ற நிலுவைத்தொகை இருந்தால் அதையும் கட்டவும் நான் இதன் மூலம் உறுதி ஏற்கிறேன். |
| எனவே ........... என்ற எண்ணுள்ள மின்னிணைப்பை எனது பெயரில் மாற்றித் தருமாறு வேண்டுகிறேன். | எனவே ...........என்ற எண்ணுள்ள மின்னிணைப்பை எனது பெயரில் மாற்றித் தருமாறு வேண்டுகிறேன். |
| இடம்: பெயர் மாற்றம் பெறுபவர் | இடம்: பெயர் மாற்றம் பெறுபவர் |
| தேதி: கையொப்பம் | தேதி: கையொப்பம் |
| முழு முகவரி | முழு முகவரி |

படிவம் – 2

(பெயர் மாற்றப் படிவங்கள் (பார்க்க, ஒழுங்குமுறை விதிகள் 5(7))

(விற்பனை போன்ற நிலைமையின் போது பெயர் மாற்றம் தருபவர் அளிக்க வேண்டிய சம்மதக் கடிதமாகப் பயன்படுத்த வேண்டியது)

பெறுநர்

குறிப்பிட்ட பதவிப் பொறியாளர்

உரிமதாரர் முகவரி

திரு/ திருமதி…………அவர்களின் மகன் / மகள் / மனைவி ஆகிய திரு / திருமதி

……………என்ற ………..ஊரில்………என்ற………

தெருவில்………என்ற கதவிலக்கத்தில் உள்ள கட்டிடத்தின் சொந்தக்காரராகிய நான் மேற்படி கட்டிடத்தை அவருக்கு விற்று விட்டமையால்…………….என்ற கணக்கு எண்ணுடைய என் பெயரில் உள்ள மின்னிணைப்பைத் திரு / திருமதி……………அவர்களின் மகன் / மகள் / மனைவி ஆகிய திரு/ திருமதி ……….. என்பவர் பெயருக்குப் பெயர் மாற்றம் செய்ய, நான் இதன் மூலம் முழுச் சம்மதத்தையும் தருகிறேன்.

இந்தப் பெயர் மாற்றம், இருப்பில் இருக்கும் வைப்புத் தொகையை வைத்து பெயர் மாற்றம் பெறுபவர் காப்புவைப்புத் தொகையும் பிற கட்டணங்களையும் செலுத்த ஒப்புக் கொள்வதை வைத்து தரப்படலாம்.

இடம்: பெயர் மாற்றம் தருபவர்

தேதி: கையொப்பம்

முழு முகவரி

*இதில் தேவையற்ற வாக்கியத் தொடரை

நீக்கிவிடலாம்.

படிவம் – 2

(பெயர் மாற்றப் படிவங்கள் (பார்க்க, ஒழுங்குமுறை விதிகள் 5(7))

(விற்பனை / பதிவு செய்யப்பட்ட குத்தகை / உரிய அதிகார அமைப்பிடமிருந்து பெறப்பட்ட உடைமை கட்டளை போன்ற குடியிருப்பு சான்று / அந்தந்த வரம்பு எல்லைக்குண்டான நீதிமன்ற தீர்ப்புகள் அல்லது உத்தரவுகள் –போன்ற நிலைமையின் போது பெயர் மாற்றம் தருபவர் அளிக்க வேண்டிய சம்மதக் கடிதமாகப் பயன்படுத்த வேண்டியது)

பெறுநர்

குறிப்பிட்ட பதவிப் பொறியாளர்

உரிமதாரர் முகவரி

திரு/ திருமதி…………அவர்களின் மகன் / மகள் / மனைவி ஆகிய திரு / திருமதி

……………..என்ற ………ஊரில்……….என்ற………

தெருவில்………என்ற கதவிலக்கத்தில் உள்ள கட்டிடத்தின் சொந்தக்காரராகிய நான் மேற்படி கட்டிடத்தை அவருக்கு விற்று விட்டமையால் குத்தகைக்கு விட்டுவிட்டமையால்……………என்ற கணக்கு எண்ணுடைய என் பெயரில் உள்ள மின்னிணைப்பைத் திரு / திருமதி…………அவர்களின் மகன் / மகள் / மனைவி ஆகிய திரு/ திருமதி……….. என்பவர் பெயருக்குப் பெயர் மாற்றம் செய்ய, நான் இதன் மூலம் முழுச் சம்மதத்தையும் தருகிறேன்.

இந்தப் பெயர் மாற்றம், இருப்பில் இருக்கும் வைப்புத் தொகையை வைத்து பெயர் மாற்றம் பெறுபவர் காப்புவைப்புத் தொகையும் பிற கட்டணங்களையும் செலுத்த ஒப்புக் கொள்வதை வைத்து தரப்படலாம்.*

………..என்ற கணக்கு எண்ணில் பின்னாளில் பெயர் மாற்றம் பெறுபவர் ஏதேனும் நிலுவையை செலுத்தத்தவறினால் அந்நிலுவையினை நான் செலுத்த உறுதி ஏற்கிறேன். (இது விற்பனை அல்லாத இதரவகையின்கீழ் கோரும் பெயர் மாற்றத்திற்கு மட்டும் பொருந்தும்)

இடம்: பெயர் மாற்றம் தருபவர்

தேதி: கையொப்பம்

முழு முகவரி

*இதில் தேவையற்ற வாக்கியத் தொடரை

நீக்கிவிடலாம்.

(தமிழ்நாடு மின்சார ஒழுங்குமுறை ஆணையத்தின் ஆணைப்படி)

சென்னை – 600 032,
26 ஜூலை 2022.

**சி. வீரமணி,**
*செயலாளர்,*
*தமிழ்நாடு மின்சார ஒழுங்குமுறை ஆணையம்.*

## GOVERNMENT EXAMINATIONS / EDUCATIONAL OFFICERS

### LOSS OF CERTIFICATES

It is hereby notified that the Original Higher Secondary Certificates / Matriculation Certificates / Diploma Certificates / School Certificates of the following pupils are reported to have been lost beyond recovery. Necessary steps are being taken to issue the duplicate of the said Certificates. If the Originals were to be found by anybody, they should be treated as invalid and sent to the Secretary, Board of Higher Secondary Examination / Directorate of Government Examinations, Chennai-6 / Director of Technical Education, Chennai-25 / Inspector / Inspectress of Matriculation and Anglo-Indian Schools as the case may be for cancellation:–

| *C.N.C. Number* | *Name of the Candidate and Institution* | *Register Number and Certificate Number* | *Month and Year* | *Details of Examination* | *Reference Number and Date* |
|---|---|---|---|---|---|
| *(1)* | *(2)* | *(3)* | *(4)* | *(5)* | *(6)* |
| No. VI(2)/92/2022. | | | | | |
| | Ahkash, V.S (03-01-1993) | 202686 SC 579306 | February 2010 | Typewriting English Senior First Class | கடித எண் 110581/ட்டி3/2022, 29-07-2022. |
| No. VI(2)/93/2022. | | | | | |
| | Sharil Rexilda, S (10-12-2001) | 451745 GTE 630506 | February 2020 | Typewriting Tamil Junior First Class With Distinction | கடித எண் 110989/ட்டி3/2022, 29-07-2022. |
| No. VI(2)/94/2022. | | | | | |
| | Karpagam, R (06-04-1988) | 112555 GTE 291832 | August 2019 | Typewriting Tamil Junior First Class | கடித எண் 114547/ட்டி3/2022, 29-07-2022. |

K. பிரபாகரன்,
*கூடுதல் இயக்குநர் (தேர்வுகள்) (மு.கூ.பொ),*
*தேர்வு வாரியம்,*
*தொழில்நுட்பக் கல்வி இயக்ககம்,*
*சென்னை–600 025.*

| | | | | | |
|---|---|---|---|---|---|
| No. VI(2)/95/2022. | | | | | |
| | Kotteeswari, D (10-11-1991) | 421932 GTE 626100 | February 2020 | Shorthand English Junior Second Class | கடித எண் 115085/ட்டி3/2022, 29-07-2022. |
| | | 381449 GTE 347363 | August 2019 | Shorthand Tamil Junior First Class with Distinction | Do. |
| | | 521891 GTE 81887 | September 2021 | Shorthand Tamil Senior Second Class | Do. |
| | | 112682 COA 017722 | June 2019 | Computer on Office Automation Second Class | Do. |

K. பிரபாகரன்,
*கூடுதல் இயக்குநர் (தேர்வுகள்) (மு.கூ.பொ),*
*தேர்வு வாரியம்,*
*தொழில்நுட்பக் கல்வி இயக்ககம்,*
*சென்னை–600 025.*

| சி.என்.சி. எண். | மாணவர்/மாணவி பெயர், பள்ளியின் பெயர் மற்றும் கல்வி மாவட்டம். | பதிவு/ சான்றிதழ் எண். | மாதம் மற்றும் வருடம். | தேர்வின் விவரம். | கடித எண்ணும், தேதியும். |
|---|---|---|---|---|---|
| (1) | (2) | (3) | (4) | (5) | (6) |
| No. VI(2)/96/2022. | | | | | |
| | Annapooranam. C<br>நாமக்கல் மாவட்டம் | 915536<br>902682 | September 2014<br>January 2018 | எட்டாம் வகுப்பு | ந.க. எண் 234583/டி/2021, 22-07-2022. |

க. செல்வக் குமார்,
இணை இயக்குநர் (பணியாளர்),
அரசுத் தேர்வுகள் இயக்ககம்,
சென்னை—600 006.

PRINTED AND PUBLISHED BY THE COMMISSIONER OF STATIONERY AND PRINTING, CHENNAI
ON BEHALF OF THE GOVERNMENT OF TAMIL NADU